DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: S.T.C. No. 20/2026 |
| Session | ... | |
| | | Prosecution / PW-2 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திரு.முருகானந்தம் (காவலர்) |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ. |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(A1,A2 present.)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 02.06.2026

---

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது ஆர்எஸ் மங்கல காவல் நிலையத்தில் முதல்நிலை காவலராக பணியாற்றி வருகிறேன். இதற்கு முன்னதாக நான் இரண்டாம்நிலை காவலராக ஆர்எஸ் மங்கல காவல்நிலையத்தில் பணிசெய்தேன். கடந்த 22.10.2025ம் தேதிஆனந்துார் புறகாவல்நிலையத்தில் நானும்,தலைமை காவலர் கோவிந்தசாமியும் பணியில்இருந்தபோது சுமார் காலை 9.15 மணியளவில் ஆர்எஸ் மங்கல சார்பு ஆயவாளர் அவரின் தொலைபேசியிலிருந்து தலைமை காவலர் கோவிந்தசாமியை

தொடர்புகொண்டு யாரோ இரண்டு நபர்கள் ஆனந்தூர் பகுதியில் தீபாவளி வசூல்செய்வதாக சார்பு ஆய்வாளருக்கு ரகசிய தகவல் கிடைத்ததாக தலைமை காவலர் கோவிந்தசாமியிடம் சொன்னார். மேற்படி விவரத்தை தலைமை காவலர் கோவிந்தசாமி என்னிடம் தெரிவித்தார்.

2,பின்னர் நானும் தலைமை காவலர் கோவிந்தசாமியும் ஆனந்தூர் புறகாவல்நிலையத்திலிருந்து நடந்து ஆனந்தூர் பேருந்துநிலையம் அருகே உள்ள கூட்டானி உணவகத்தில் வேலை பார்க்கும் சுலைமான்சேட்டு என்பவரிடம் சார்பு ஆய்வாளர் கூறியதகவல் பற்றி அன்றையதினம் காலை 9.30 மணியளவில் விசாரித்தபோது ஆனந்தூர் விடிவெள்ளிநகர் நகரை சேர்ந்த அஜ்மல்கான் என்பவரும் செல்வம் என்பவரும் தீபாவளி வசூல் செய்வதாக சொல்லி கூட்டானி உணவகத்தின் உரிமையாளரிடம் கேட்ட தகவல் சொன்னார்கள். அதை நாங்கள் கேட்டு கொண்டிருந்தபோது இரண்டு நபர்கள் எங்களிடம் வந்து யூனிபார்ம் போட்டிருந்தால் நீங்கள் என்ன பெரிய ஆளா புண்டாமவனே என்று கூறினார். இதைகேட்டு நாங்கள் சத்தம் போட்டு அவர்களை பிடித்தபோது எங்களை தள்ளிவிட்டு ஓடிவிட்டனர்.

3.பின்பு அருகில் உள்ள பெட்டிகடையின் ஆசிப் என்பவரும் கூட்டானி உணவகனத்தின் உரிமையாளர் சுலைமான்சேட்டு என்பவரும் அவர்களின் பெயர் அஜ்மல்கன், செல்வம் என்று கூறினார்கள். எதிரிகள் இருவரும் பார்த்தால் என்னால் அடையாளம் காட்டஇயலும்., அவர்கள் இன்று நீதிமன்றத்தில் ஆஜராகியுள்ளனர். பின்பு ஆர்எஸ்மங்கலம் காவல்நிலையத்தில் சென்று எங்களை அரசு பணியை செய்யவிடாமல் அவதுாறுகாக பேசி தள்ளிவிட்ட விவரத்தையும் சார்புஆய்வாளரிடம் கூறினோம். தலைமை காவலர் கோவிந்தசாமி என்பவரிடம் சார்பு ஆயவாளர் தனிஅறிக்கை பெற்று வழக்கு தாக்கல்செய்தார்.இதுசம்மந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. எங்கள் அன்றாட பணிகளை எங்களுக்கு பாக்கெட் நோட்டில் நேரம் வாரியாக குறிப்பிடுவது வழக்கம் என்றால் சரிதான். மேற்படி பாக்கெட்நோட்டை எங்கள் காவல்நிலைய நிலையை பொறுப்பு அதிகாரி ஆய்வு செய்து அதில் கையொப்பம்

இடுவார் என்றால் சரிதான். காவலர்கள் அன்றாடம் செய்யக்கூடிய பணிகளை GD யில் குறிப்பிடுவது வழக்கம் என்றால் சரிதான். சம்பவசமயத்தில் எங்கள் காவல் நிலையத்தின் பொறுப்பு அதிகாரி ஆய்வாளர் என்றால் சரிதான். பொதுவாக காவலர்களுக்கு எதிராக குற்ற சம்பவம் நடைபெற்றால் காவல்நிலைய பொறுப்பு அதிகாரியிடம் புகார் கொடுக்கவேண்டும் என்றால் சரிதான். ஆனால தகவல் தெரிவித்து விட்டு சார்பு ஆய்வளரிடமும் புகார் கொடுக்கலாம்.

2. சம்பவசமயத்தில எங்கள் காவல்நிலைய காவல் ஆய்வாளர் பணியில்இருந்தார் என்றால் சரிதான். எதிரிகள் இருவரையும் சம்பவத்திற்கு முன்னதாகவே எனக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. எதிரிகள் இருவரும் பணம் வசூலித்ததாக சார்பு ஆய்வாளரிடம் எழுத்துபூர்வ புகார் ஏதேனும கொடுக்கப்பட்டதா என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. சமபவ இடமான கடை மற்றும் அதை சுற்றியுள்ள பகுதிகளில் சிசிடிவி கேமராக்கள் இருந்ததா என்றால் அதை நான்கவனிக்கவில்லை. சிசிடிவி கேமராக்கள் இருந்தது என்றும் வழக்கிற்காக கவனிக்கவில்லை என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. சூலைமான்சேட், முகமது ஆசிப் இருநபர்களை தவிர வேறு நபர்களை சம்பவத்திற்கு பின் விசாரித்தோமா என்றால் சார்பு ஆயவாளர் விசாரித்திருக்காலம் நான் யாரேயும் விசாரிக்கவில்லை.மேற்படி இருநபர்களின் கடைகளிலும் எதிரிகள் எவ்வளவு பணம் வசூலித்ததாக அவர்கள்தெரிவித்தார்கள் என்றால் தற்போது நினைவில் இல்லை.சார்பு ஆய்வாளரிடம் மேற்படி இருநபர்களின் கடையில் எதிரிகள் எவ்வளவு பணம் வசூலித்தார்கள் என்று தெரிவித்தேனா என்றால் சார்பு ஆய்வாளர் விசாரணையில் கேட்கவில்லை அதனால சொல்லவில்லை.அ.சா.ஆ.1 தனி அறிக்கையில் என்ன விவரங்கள் உள்ளது என்று நான் படித்து பார்த்தேனா என்றால் சம்பவ சமயத்தில் படித்து பார்த்தேன் தற்போது நினைவில் இல்லை. தற்போது நான் போலிசார் விசாரணையில் பதிவுசெய்யப்பட்ட 161 வாக்குமூலத்தை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன்.மேற்படி 161 வாக்குமூலத்தின் அடிப்படையில் தான் நான் சாட்சியம் அளி்க்கிறேன் என்றால சரிதான்.

4.புறகாவல்நிலையத்தில் போலிசார் பொதுமக்களுக்கு இடைஞ்சலாக செயல்பட்டு வந்ததை எதிரிகள் கேட்டதால் அ.சா.1 அவர்கள்மீது பொய்யாக தனிஅறிக்கை கொடுத்துள்ளார் என்றும் அதற்கு ஆதராவாக நான்பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.தனிஅறிக்கையானது சார்பு ஆயவாளரிடம் சம்பவம் நடைபெற்று சுமார் 30–40 நிமிடங்களில் கொடுக்கப்பட்டது. பொதுவாக இருநபர்கள் மீது குற்றசம்பவம் நடைபெற்று இருந்தால் ஒரு நபர் புகாரும் மற்றொரு நபரும் அறிவேன் சாட்சி கையொப்பமும் போடுவார்கள் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. தனிஅறிக்கையில் நான் எந்த கையொப்பமும் இடவில்லை. வழக்குசம்மந்மாக நான் தனிபுகார் எதுவும் கொடுக்கவில்லை. நான் சொன்னவாறு சொன்னநேரத்தில் எதிரிகள் எந்த வித குற்றசெயலிலும் ஈடுபடவில்லை என்றும் நாங்கள் சட்டவிரோதமாக செய்த செயல்களை எதிரிகள் கண்டித்ததால் அவர்கள் மீதுபொய்யாக தனிஅறிக்கை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால தான் எதிரிகள் மீது தனிபட்ட முறையில் புகார் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. ஆஜர்எதிரிகளுக்கும் வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றால சரியல்ல.

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.